**செ.வெ. எண்: 16** **நாள்: 06.01.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (6.1.2012) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பு நிதியிலிருந்து பல்வேறு அறுவை சிகிச்சை மேற்கொண்ட வறுமை நிலையில் வாழும் 59 நபர்களுக்கு 14 லட்சத்து 36 அயிரத்து 300 ரூபாய்க்கான நிதியுதவியினை வழங்கினார்கள்.

இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்று நோய் சிகிச்சை, தலையில் அறுவை சிகிச்சை, இடுப்பு எலும்பு முறிவு அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு அறுவை சிகிச்சை, சிறுநீரக கல் மற்றும் நோய்க்கான சிகிச்சை மேற்கொண்ட 59 நபர்கள், வறுமை நிலையில் வாழும் தங்களுக்கு அறுவை கிசிச்சைக்காக தமிழக அரசு நிதியுதவி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

அவர்களது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 59 நபர்களுக்கு, 14 லட்சத்து 36 அயிரத்து 300 ரூபாய்க்கான நிதியுதவியினை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதில் 7 நபர்களுக்கு இன்று (6.1.2012) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி வழங்கினார்கள். தமிழ்நாடு மாநில நோயாளர் அமைப்பு நிதிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள்.

நிதியுதவியை பெற்றுக் கொண்ட அனைவரும் தங்களது வறுமையான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நிதியுதவி அளித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 6.1.2012